# DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.468/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 6 | நாள் | : | 06.10.2025 |
| பெயர் | : | கார்த்திக் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06th day of October 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சுரண்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தென்காசி காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தபோது கடந்த 13.01.2020 ம் தேதி மாலை 4 மணிக்கு உதவி ஆய்வாளர் மாதவன் தலைமையில் நானும், காவலர் ஜசக்ராஜா, சம்சுதீன், ரமேஷ், மாரியப்பன் ஆகியோருடன் ரோந்து பணியில் ஈடுபட்டோம். உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்பேரில் உதவி ஆய்வாளர் எங்களை ஆய்க்குடி செல்லும் சாலையில் உள்ள வாகினி தியேட்டர் பக்கம் எங்களை சோதனைக்காக அழைத்துச் சென்றார். நாங்கள் செல்லும்போது இரயில்வே கேட்டிற்கு அருகே சண்முகசுந்தரம் என்பவருடைய பாலடைந்த காம்பவுண்டிற்குள் ஏற்கனவே எங்களுக்கு

அறிமுகமாகியிருந்த மேசாக் என்பவர் நின்று கொண்டிருந்தார் மற்றவர்கள் அமர்ந்திருந்தார்கள் அவர்கள் இந்திய இறையாண்மைக்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும், பொது அமைதிக்கும் குந்தகம் ஏற்படும் விதமாக நமது அமீர் காஜாமுகைதீன் சொன்னதுபோல் நாமும் இந்திய இறையாண்மைக்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும், பொது அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கும் விதமாக நாடே திரும்பி பார்க்கும் விதத்தில் ஏதேனும் தேச விரோத செயலை செய்ய வேண்டும் தற்சமயம் காஜாமுகைதீனும், நமது நண்பர்களும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் இருந்த போதிலும் நாம் அவர்கள் கூறிய செயல்களை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் கன்னியாகுமரி மாவட்டம் களியாக்கவினையில் சிறப்பு உதவி ஆய்வாளர் சுட்டுக் கொல்லப்பட்டதுபோல் நாமும், ஏதேனும் ஒரு சம்பவத்தை தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களில் செய்ய வேண்டுமென்று பேசிக் கொண்டிருந்தார். அவர்களை அதே இடத்தில் விட்டுச் சென்றால் இந்திய இறையாண்மைக்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும், பொது அமைதிக்கும் குந்தகம் ஏற்படக்கூடும் என்பதால் நாங்கள் அவர்களை பிடிக்க முற்பட்டோம் அவர்கள் எங்களை கண்டதும் ஓட முற்பட்டார்கள் நாங்கள் மணிகண்டன் மற்றும் கண்ணன் ஆகியோர்களின் உதவியுடன் தப்பியோட முயன்றவர்களை பிடித்தோம் அவர்களை பிடித்து விசாரித்தபோது அவர்களில் மேசாக் என்பவரை தவிர மற்றவர்கள் ஜக்கிரியா, அல்ஹபீப், ஹரீம் நவாஸ், மீரான் மைதீன் என்று தெரியவந்தது. அவர்களை அந்த இடத்திலிருந்து காவல் நிலையம்

கொண்டு வரவும், வழக்கு பதிவு செய்யவும் நான் உதவியாக இருந்தேன். அன்றைய தினம் என்னை ஆய்வாளர் விசாரித்தார் அதற்கு பின்னர் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களைத்தான் ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் விசாரணையிலும் கூறினேன். நாங்கள் அன்றைய தினம் மாலை 4 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டோம். நாங்கள் நேரடியாகவே ஆய்க்குடி சாலைக்கு சென்றோம் கல்லூரி விடும் நேரம் என்பதால் அதை கண்காணிக்கச் சென்றோம். ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் விசாரணையிலும் மேற்கண்ட விவரங்களை கூறினேன். தலைமைக் காவலர் மாரியப்பனும் எங்களுடன் ரோந்து பணியில் ஈடுபட்டார் என்று ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன். தென்காசி காவல் நிலையத்தில் கண்காணிப்பு கேமிரா பொருத்தப்பட்டுள்ளது நாங்கள் எத்தனை மணிக்கு நிலையத்திலிருந்து புறப்பட்டோம் எத்தனை மணிக்கு நிலையம் திரும்பினோம் என்ற விவரங்கள் அதில் பதிவாகும் என்றால் சரிதான். 1வது எதிரிதான் மற்ற நால்வரின் பெயரைக் கூறினார். நான் காவல் ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் விசாரித்தபோது பின்னால் விசாரித்துத் தெரிந்து கொண்ட நபர்கள் என்று கூறியுள்ளேன் அவ்வாறு விசாரித்த நபர் யார் என்று குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் சரிதான். அசாதாரண சூழ்நிலையில் கருத்தில்கொண்டு

எப்போதும் வாக்கிடாக்கி வைத்திருப்போம் கைவிளங்கை எப்போதும் எடுத்துச் செல்வோம் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் உதவி ஆய்வாளர் வாகனத்தில் சென்றேன். இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்களுக்கு மேல் பயணம் செய்யக்கூடாது என்றால் சரிதான். நாங்கள் எந்த இடத்திற்கு செல்லும்போது உதவி ஆய்வாளருக்கு இரகசிய தகவல் கிடைத்தது என்று எனக்கு ஞாபகமில்லை. நாங்கள் சம்பவ இடத்திற்கு முதலில் யார் நுழைந்தார் என்றால் நாங்கள் அனைவரும் ஒரே நேரத்தில் உள்ளே சென்றோம். அந்த இடத்தின் பரப்பளவு சுமார் 1 1/2 ஏக்கர் என்றால் குறிப்பிட்டுக் கூற இயலாது ஆனால் அந்த அளவு இருக்கலாம். அந்த சுற்றுச் சுவரில் ஒரே ஒரு வாசல்தான் உள்ளது என்றால் சரியாக ஞாபகமில்லை. அந்த சுற்றுச்சுவர் உயரமான சுவர் என்றால் சரிதான் 15 அடி உயரமுள்ள சுவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் உள்ளே நுழையும்போது அவர்கள் பேச்சை நிறுத்திவிட்டார்களா என்றால் இல்லை. அந்த கட்டிடத்திலிருந்து பார்க்கும்போது சுற்றுச்சுவருக்குள் நுழையும் நபர்கள் யார் என்பதை கவனிக்க முடியும் என்றால் ஞாபகமில்லை. 2020 ம் ஆண்டில் அனைவரிடமும் ஆண்ட்ராய்டு செயலி கொண்ட அலைபேசி பயன்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். எனவே குறிப்பிட்ட இடத்திற்கான அலைபேசி கோபுர உள் வெளி அழைப்புப்பட்டியலை பார்வையிட்டால் அந்த இடத்தில் நாங்கள் இருந்தோமா, எதிரிகள் இருந்தார்களா என்ற விவரம் துலங்கும் என்றால் சரிதான். என்னுடைய அலைபேசி எண்ணும் அந்த இடத்தில் பதிவாகியிருந்ததா என்று அந்த அழைப்பட்டியலை பார்த்தால் கூற முடியும் என்றால்

சரிதான். ஆய்குடி சாலை ஜான்ஸ் பள்ளி, ஜே.பி.கல்லூரி, செந்தில் ஆண்டவர் பாலிடெக்னிக் மாணவர்கள் சென்று திரும்பும் சாலை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் மாணவர்கள் அந்த சாலையில் வந்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். சாட்சி பின்னர் வந்தார்களா என்று ஞாபகமில்லை என்று கூறுகிறார். திருநெல்வேலி, தென்காசி தொடர்வண்டி அந்த நேரத்தில் அந்த இரயில்வே கேட்டை கடந்து செல்லும் என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு கிழக்கே தென்ன நார் தயாரிக்கும் இடமும், மேற்கே இரும்பு பீரோ தயாரிக்கும் இடமும் உள்ளது என்றால் சரிதான் ஆனால் சற்று தொலைவில் உள்ளது. தென்னை நார் தயாரிக்கும் இடத்தில் சுமார் 30 நபர்கள் வேலை பார்த்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் கட்டிடத்தில் மற்ற எதிரிகள் எந்த பகுதியில் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தற்போது ஞாபகமில்லை. உதவி ஆய்வாளர் அவருக்கு கிடைத்த இரகசிய தகவல் பற்றிய விவரங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளவில்லை தகவல் பற்றி கூறாமலேயேதான் எங்களை அழைத்துச் சென்றார். அந்த பாலடைந்த கட்டிடம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி முள் மரங்கள் நிறைந்தவை என்றால் சரிதான். எதிரிகளை ஷேர் ஆட்டோவில் அழைத்துச் சென்றோம். நாங்கள் எதிரிகளை அழைத்து வரும்போது தென்காசி, திருநெல்வேலி தொடர்வண்டி வரும் நேரம் என்பதால் இரயில்வே கேட் அடைக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. எங்கள் காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் பொது நாட்குறிப்பினை தருவித்தால் அதில்

நாங்கள் ரோந்துக்கு புறப்பட்ட நேரம், திரும்பிய நேரம் மற்ற விவரங்கள் அனைத்தும் பதிவாகியிருக்குமா என்றால் இருக்கும். 1வது எதிரி வேறு வழக்கில் இருந்தவர் மற்ற எதிரிகள் பற்றி எனக்கு தெரியாது. எங்களுக்கு பாக்கெட் டைரி உள்ளது. அந்த பாக்கெட் டைரியை எங்கள் உயர் அதிகாரி கேட்கும்போது கொடுப்போம். அந்த பாக்கெட் டைரியை பார்வையிட்டால் சம்பவ தினத்தன்று நாங்கள் என்ன பணியை மேற்கொண்டோம் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் உதவி ஆய்வாளருடன் ரோந்து பணிக்குச் செல்லவில்லை என்றும் உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் காரணமாக உயர் அதிகாரிகளின் தூண்டுதலின்பேரில் ஆவணங்களுக்கேற்ப பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>1 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.</u>

என்னை ஆய்வாளரும் துணை கண்காணிப்பாளரும் விசாரிப்பதற்கு அறிவிப்பு கொடுத்து அழைக்கவில்லை. பின்னர் சாட்சி கூறுகிறார் அறிவிப்பு கொடுத்துதான் விசாரித்தார். நான் எப்போதும் பணியின்போது அலைபேசியை கையில் வைத்திருப்பேன். அந்த அலைபேசி எண் எங்கள் காவல் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட எண் ஆகும். அந்த அலைபேசி எண் வழங்கப்பட்டதன் நோக்கம் காவல் உயர் அதிகாரிகளுக்கும் மற்ற காவலர்களுக்கும் உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகதான் எண் வழங்கப்பட்டுள்ளது. அசாதரணமான சம்பவம்

ஏதும் நடந்தால் உடனடியாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிப்பது வழக்கம் என்றால் சரிதான். நான் கைபேசி மூலம் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்ததாக ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். எனக்கு இரகசிய தகவல் கிடைத்ததாக ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் விசாரணையில் கூறவில்லை. ஆய்வாளர் பதிவு செய்த வாக்குமூலத்தில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கண்ணன், மணிகண்டன் எங்களுக்கு உதவியதாக ஆய்வாளர் விசாரணையின்போது நான் கூறவில்லை என்றால் சரிதான். நாங்கள் எதிரிகளை கைது செய்ததாக கூறப்படும் நாளில் நாங்கள் எத்தனை மணிக்கு நிலையம் திரும்பினோம் என்றால் மாலை 5.30 மணியளவில் திரும்பினோம். நாங்கள் நிலையம் திரும்பிய போது ஆய்வாளர் காவல் நிலையத்தில் இருந்தார். ஆய்வாளர் எதிரிகளை விசாரித்தபோது நானும் உடனிருந்தேன். ஆய்வாளர் நிலையம் திரும்பியவுடன் மாலை 5.30 மணிக்கு எதிரிகளை விசாரிக்கத் துவங்கினார். ஆய்வாளர் எவ்வளவு நேரம் எதிரிகளை விசாரித்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. எதிரிகள் மீது அபிவிருத்தி செய்யப்பட்ட தகவல்களை கூற வேண்டுமென்பதற்காகவே துணை கண்காணிப்பாளர் விசாரித்ததாக கூறப்படும் வாக்குமூலத்தில் கூடுதல் தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் நிலையத்தில் இருக்கும் வரை எதிரிகளை இருக்கையில் அமர வைத்து விசாரித்தார். அன்றைய தினம் நான் எப்போது வீட்டிற்கு சென்றேன் என்று ஞாபகமில்லை. தென்காசியில்

ஷேர் ஆட்டோ அனுமதிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரிகளை ஷேர் ஆட்டோவில் ஏற்றிச் சென்றதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. டீசல் ஆட்டோவில் கொண்டு சென்றோம். அந்த சுற்றுச் சுவருக்குள் எத்தனை கட்டிடங்கள் அமைந்துள்ளது என்று ஞாபகமில்லை. அந்த இடத்தைச் சுற்றிலும் சோதனை செய்தோம் ஏதும் கிடைக்கவில்லை. சுமார் 10 அல்லது 20 நிமிடங்கள் வரை தேடினோம். நாங்கள் தனிதனியே தேடினோம் ஆறுபேரும் தனிதனியே தேடினோம். சம்பவ இடத்தில் முட்புதர் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. நான் கூறும் கல்லூரிகள் ஆய்க்குடி காவல் நிலைய எல்கைகுட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கல்லூரிகள் என்றால் சரிதான். நான் அப்பகுதியில் ரோந்து சென்றதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து செந்தில் ஆண்டவர் கல்லூரி சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. என்னுடைய அலைபேசி எண்.9489446069 சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் நடந்து செல்லும்இடம் அல்ல என்றும் வாகனம் செல்லும் இடம் என்பதால் வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். எதிரிகளிடமிருந்து வாகனம் எதுவும் கைப்பற்றவில்லை அலைபேசி ஏதும் கைப்பற்றினோமா என்று ஞாபகமில்லை. நாங்கள் எதிரிகளை சுற்றி வளைத்து பிடித்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிரிகளின் பெயர் அங்க அடையாளங்களை என்னுடைய பாக்கெட் புத்தகத்தில் குறிப்பிடவில்லை. காவல் நிலையத்தில் வைத்துதான் பெயர் விவரம் விசாரிக்கப்பட்டது. நான் கூறுவதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் சம்பவ நடந்ததாக கூறப்படும் இடம்

போக்குவரத்து நிறைந்த பகுதி என்றும் அதன் அருகில் குடியிருப்புகளும் உள்ளது என்றும் தொழிற்சாலைகளும் உள்ளது என்றும் பொது நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உள்ளது என்றும் பணி நேரம் முடியும் நேரம் என்பதால் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடம் என்றும் எதிரிகள் அங்கு ஒன்றாக கூடியிருந்ததாகவும் அவர்களை நாங்கள் கைது செய்ததாக கூறுவதும் பொய் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கூறுவதுபோல் ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால் பொதுமக்கள் கூடியிருப்பார்கள் என்றும் நாங்கள் சம்பவ நடந்ததாக கூறப்படும் இடத்தையும் எதிரிகளையும் அதே இடத்தில் அலைபேசி கேமிராவில் பதிவு செய்திருப்போம் என்றும் சொன்னால் சரியல்ல. மாலை நேரம் தொடர்வண்டி தொடர்ச்சியாக சென்று வரும் பகுதி என்பதால் நாங்கள் எதிரிகளை சம்பவ நடந்ததாக கூறப்படும் இடத்தில் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. என்னுடன் உடன் வந்ததாக கூறப்படும் அனைத்து நபர்களின் வாக்குமூலங்களும் எனது வாக்குமூலமும் வார்த்தைகள் ஏதும் மாற்றமின்றி ஒரே விதமாக அமைக்கப்பட்டது என்றும் அவை யாரையும் விசாரிக்காமலேயே தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்பதால்தான் அவ்வாறு அமைந்துள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் சதி திட்டம் தீட்டியதாகவும் இந்திய இறையாண்மைக்கு எதிராக செயல்பட்டதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. எனது உயர் அதிகாரிகள் உத்தரவுப்படி நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் அதுபோன்ற சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அனைத்து கேள்விகளுக்கும் ஞாபகமில்லை என்று கூறுவதால் எனது சாட்சியம் நம்பத்தகுந்ததல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.06 17:54:17 +0530